நெ. M. 3855.

கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை

Vol. 6 டிசம்பர், 1943 & ஜனவரி, 1944 நெ. 9 & 10

எடிடோரியல் கமிட்டி.

ஸ்ரீமான்கள்

பி. எஸ். குமாரஸ்வாமி ராஜு, எம்.எல்.ஏ.

எஸ். சத்தியநாராயண.

எடிடர்.

ஸ்ரீமான்

வி. வியன்ன, பி.ஏ., பி.எல்.

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்

டெலிபோன் நெ. 86166.

பொருள் அடக்கம்.

1. தலையங்கம்.—

	பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்களுக்கு பயிற்சி	... 67
	ஸ்தல ஸ்தாபன சட்டத்தின் கீழ் ஹைகோர்டு அப்பீல்	... 70
2.	இந்தியாவின் தேகாரோக்கிய நிலைமை	... 71
3.	தொழில் அபிவிருத்திக்காக 15 வருஷ திட்டம்	... 72
4.	அனைவருக்கும் கல்வி	... 73
5.	வர்த்தமானங்களும், குறிப்புகளும்	... 74

கிராம பஞ்சாயத்து போர்டின் கடமை.

கிராமத்தின் சௌகரியத்துக்காக கிராம ஜனங்களின் சரீர ஆரோக்கியம் அவசியம். ஆகையால் சகல வியாதி நிவாரணியாயிருக்கும்

அம்ருதாஞ்சனத்தை

கிராமத்திலேயே இருக்கும்படியாய் பார்த்துக் கொள்ளவேண்டும்.

The Village Panchayat Journal.

VOL. VI] DECEMBER, 1943 & JANUARY 1944 [No. 9 & 10.

The Editorial Committee do not hold themselves responsible for views expressed by contributors. Contributors are requested to write legibly and on one side of the paper. Manuscripts will not be returned unless stamps are sent to cover postage. Matter intended for the issue of any particular month should reach the Committee before the 15th of the previous month.

Training for Members of Panchayat Boards.

The history of rationing during the pressing times of the present proves how a great opportunity has been missed in not providing the country with a complete net work of Panchayat Boards. The Government of the day finds it impossible to introduce full and complete rationing; because, we are told, the country is vast and rural. The vastness of it would not have mattered, if it had not that peculiar disadvantage of being rural. What the exact import of this term "rural" is in reference to the present context has to be understood correctly, if we are to find a proper remedy. In this country the distinction between "rural" and "urban" is not based on any clear cut distinction in regard to social conditions. An urban area like Chicacole or Nandyal, has much the same life going on in it as in the surrounding areas. The difference really is in the Municipalisation. Similarly big Panchayat Boards known in earlier times as Panchayat Unions, are also urban. Resolved into its fundamental, this distinction between rural and urban consists in being fairly organised for Civic life or not organised for it all. Need we say that in our country the fundamental unit for civic life is the Panchayat and if the Panchayat had been allowed free scope to develope as the universal urbanising influence, with the power to aggregate with the neighbouring units where it was itself two small or too weak to stand alone, the Government would have found organisation enough and spirit enough to undertake universal rationing at very short notice. Even now it is not too late for the Government to universalise the Panchayat institution, so that in post-war reconstruction we may have ready to hand an institution through which the whole humanity of the country may be easily and authoritatively reached.

Apart from this larger drive, there is one aspect of Panchayat work that has to be started immediately, if the Panchayat, as the representative institution of the people, should serve the need of the

day. The war has created problems of various types. The food problem in itself has grown in intricacy. Starting with the irrigation facilities that the Government is desirous to create, the loans they are prepared to give, and the advances they have determined to make the problem culminates in the technique of the grain purchasing officer, and the district Collector disposing of the food in the manner best calculated to keep society going with its feed properly provided. The cloth problem is equally complicated on account of controls that are imposed. The question of safety grows more and more complex and important as days advance. Keeping of health and keeping down of epidemics is a problem that has to be carefully attended to, to keep the nation fit for the part it has to play both during the war and after it. The economic conditions are undergoing an imperceptible metamorphosis. The present inflation and the deflation that has gradually to follow on the close of the war will both have far reaching effects upon life as a whole. The varied and numerous steps the Government even now take to mitigate the effects of inflation have, at present, very little chance of being properly appreciated by the population. Co-operative store economy has come to stay and the co-operative spirit has to prevail as in war so when peace is established. Without our knowing it, a large number of miscellaneous crafts are developing in rural areas to strengthen war resources or replace material which has ceased to be imported. These must find their place in the national economy after the war. In short, our life is in the process of being consciously or unconsciously planned and its ultimate nature for good or evil will depend entirely on the knowledge that the general mass of mankind in our country possess of this developing life. We have often pleaded in these pages for this or that privilege to be given to our Panchayat Boards. To-day, however, we desire to press on the attention of the Government and all such as are interested in the life of this country, the great need that has arisen for representative men on the Panchayats to be trained to understand their duties to their constituents not merely in regard to administrative matters but in regard to general life as well, so that they, in their turn, may affect the whole mass and help to raise the nations standard of knowledge and activity. The administrative side of Panchayat life equally presumes knowledge of matters covering the whole field of life as may be seen from the list of administrative measures that a panchayat may undertake. A reference to both the obligatory and the optional duties of Panchayats is invited.

Under the present Local Boards Act, the Panchayat, wherever it is formed, practically replaces the District Board and may exercise most functions. Not only that, it can cover many activities of the Government and other institutions as well, under Sec. 65, 65-A, B, and C. The Government, if it so chooses, may

make over any of its constructive village respons[illegible] to the Panchayat Board. However, with the slender powers that are now vested in the Panchayats and the slenderer resources, it is true that the Panchayats are in a helpless condition so far as practical carrying out of measures is concerned. But that by itself need not be a bar in the way of Panchayatdars getting fit for better understanding of life and imparting that understanding to their populations. The Government conceded the inestimable privilege of getting trained to the members of Co operative Boards which are concerned with but one aspect of village life. Why they have not so far thought of the village Panchayatdar in this matter is difficult to understand. He deals really with the whole life of the villager and his training has therefore to be more urgently looked after. Non-Official bodies like the Provincial Co-operative Union and District Banks have been entrusted with the training of the Co-operative Panchayatdars, the Government making substantial grants to the extent of two thirds of the cost. In regard to the training of the village Panchayatdars, non-official bodies like the Provincial Union of Panchayat Boards may be called upon to prepare a scheme and put it into co-operation after proper scrutiny. The Panchayats have no funds, however, to spend on this training, nor the Panchayat Union. Therefore, it becomes necessary that the Government should meet the entire cost of the scheme. Let not the Government feel that they are training the executive officers, or special officers for the village Panchayats and there, their responsibility ends. It is exactly because the Government has not trained village Panchayatdars or Municipal Councillors or District Board Members that they have had to think of Commissioners, Executive Officers and Special Officers. Even granting the need for executive officers, they can never replace the Panchayatdars in the higher duties of shaping the life and morale of populations committed to the care of local bodies. It is therefore our earnest request that considering Panchayats as the key institutions for the development of all public life in this country, they should forthwith devise a proper course of training village Panchayatdars in close co-operation with non-officials and provide for the country men who can really be village leaders.

We wish it were true.

Indian Information the official organ of the Government of India of 15th December 1943 has the following paragraph in the article entitled "State Procurement of food grains, How machinery is worked in Provinces" under matter referring to Madras.

> "Under this scheme, wherever necessary, Co-operative Societies will be entrusted with the task of distribution of grains in the villages and, in their absence, Panchayat Boards will be asked to work."

We wish this were true. But alas! even as policy, the Madras Government have considered Panchayats not fitted to carry on such work. The Co-operative Societies also are not fully used. They are mere hand-maids to private dealers. It is well the Madras Government take serious stock of the situation, entrust all distribution to Co-operative Societies, and, in their absence, to Panchayats.

கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை.

Vol. 6	டிசம்பர், 1943 & ஜனவரி, 1944	No. 9 & 10

நிருபர்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்கு எடிட்டோரியல் கமிட்டி ஜவாப்தாரி ஆகிறதில்லை. இந்தப் பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் தெளிவாக காகிதத்தில் ஒரே பக்கம் எழுத வேண்டியது. தபாற் செலவுக்கு வேண்டிய ஸ்டாம்புகள் அனுப்பினலன்றிக் கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்பமுடியாது. எந்த மாதத்தின் சஞ்சிகைக்காக வியாஸம் அனுப்பப்படுகிறதோ அதற்கு முன்மாதத்தில் 15-ந் தேதிக்குள்ளாக அனுப்பவேண்டும்.

தலையங்கம்.

பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்களுக்கு பயிற்சி.

தற்சமயம் பங்கீடு முறை அமுலுக்குக் கொண்டுவருவதில் ' ஏற்படும் கஷ்டங்களைப் பார்க்கும் போது, தேசம் பூராவும் பஞ்சாயத்து போர்டுகள் ஸ்தாபிதம் செய்யவேண்டிய அவசியம் முன்பு உணரப்படாமல் சந்தர்பம் நழுவ விடப்பட்டதைப்பற்றி வருந்தவேண்டி யிருக்கிறது. இந்த பிரும் மாண்டமானதும் கிராமங்கள் கொண்டதுமான தேசம் பூராவும் பங்கீடு ஏற்படுத்து வதில் கவர்மெண்டார் பல கஷ்டங்களை சமாளிக்கவேண்டி யிருக்கிறது.கிராமங்கள் கொண்ட தேசமாய் இருப்பதால் என்ன கஷ்டங்கள் ஏற்படு கின்றன என்று அறியவேண்டும். நம் தேசத்தில் கிராமத்திற்கும் நகரத்திற்கும் வித்தியாசம் சமூக வாழ்க்கையின் வித்தியாசத்தை அடிப் படை யாகக்கொண்டதல்ல. உதாரணமாக நகரங்கள் எனப்படும் சிக்கா கோல், நந்தியால் போன்ற இடங்களின் வாழ்க்கைக்கும் அதை சுற்றினு முள்ள பிரதேசங்களின் வாழ்க்கைக்கும் அதிக வித்தியாசம் கிடையாது. அங்கு முனிசிபாலிடிகள் ஏற்பட்டதால்தான் காணப்படும்எல்லா வித்தியா சங்களும் ஏற்பட்டன. அதேபோல் தான் முன்பெல்லாம் பஞ்சாயத்து யூனியன்கள் என்று அழைக்கப்பட்ட பெரிய பஞ்சாயத்து போர்டுகளின் விஷயத்திலும். இதற்கு உதாரணமாக ஒரு பக்கத்தில் பாமிடியையும், மறு பக்கத்தில் நாமக்கல்லையும் கூறலாம். ஆகையால் அடிப்படையாக பார்த் தோமானால், முனிசிபல் நிர்வாகம் ஸ்தாபிதம் செய்யப்பட்ட இடமா,

இல்லையா என்பதே முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயமாக இருக்கிறது. இப் பஞ்சாயத்துகளை தக்கபடி எல்லாவிடங்களிலும் ஸ்தாபித்து, சிறுசிறு பஞ்சாயத்துகளை பக்கத்திலுள்ள இதர பஞ்சாயத்துகளுடன் இணைத்து வேலை செய்யும்படி ஏற்பாடு முன்னமேயே செய்யப்பட்டிருந்தால், அதிக அவகாசம் இன்றியே தேசம் பூராவும் பங்கீடு முறையை அமுலுக்குக் கொண்டு வருதல் சுலபமாக இருந்திருக்கும் இப்போதும் அப்படிச் செய்ய இடமிருக்கிறது. யுத்தத்திற்குப் பின் நிர்மாண வேலையை தேசத்தின் ஒவ்வொரு பாகத்திற்கும் பயன்படும்படி செய்ய உதவியாக இருக்கும்.

இந்தப் பெரிய பிரச்னை ஒரு புறமிருக்க ஜனங்களின் பிரதிநிதிகளாக பஞ்சாயத்துகளை உடனேயே ஏற்படுத்தவேண்டிய அவசியத்திற்கு இதர காரணங்களும் இருக்கின்றன. யுத்தத்தினுல் பல பிரச்னைகள் கிளம்பியிருக்கின்றன. ஆகார பிரச்னையே மிகவும் சிக்கலாகிவிட்டது. பயிர்களுக்கு நீர்பாசன வசதிகள் ஏற்படுத்த உதவிசெய்தல், கடன் கொடுத்தல், பணம் விநியோகம் செய்தலிலிருந்து, தான்யங்கள் வாங்கும் உத்தியோகஸ்தர், கிடைக்கும் உணவை அனைவரும் நியாயப்படிக்கு அடையும்படி செய்ய ஜில்லா கலெக்டர்வரை கவனிக்க வேண்டியிருக்கிறது. கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு, துணி பிரச்னையும் சிக்கலாகத்தான் இருக்கிறது. யுத்தத்திலும், அதற்கு பின்னும் தேசம் சரியான சேவை புரிய, ஜனங்களின் தேக நிலமை திருப்திகரமாகவும், வியாதிகள் பாவாமலும் கவனித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஜனங்களின் பொருளாதார நிலமை கண்ணுக்குப் புலப்படாத ஒரு மாறுதலை யடைந்து வருகிறது. இப்போதிருக்கும் நாணய பெருக்கும் யுத்தத்திற்கு பின் வரப்போகும் மந்தமும், பலவிதத்தில் ஜனங்களின் வாழ்க்கையை பாதிக்கும். இந்த நாணயபெருக்கத்தினுல் ஏற்படும் கஷ்டங்களை தடுக்க கவர்மெண்டார் பலவிதமான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனல் அவைகளை பாமர ஜனங்கள் தற்சமயம் நன்றாக அறிந்துக் கொள்ள முடியவில்லை. கோவாபரேடிவ் ஸ்டோர்கள் நிரந்தரமாக நிலைத்து விட்டன. இந்த கோவாபரேடிவ் உணர்ச்சியானது யுத்தத்திற்குப் பின்னும் நீடித்திருக்கவேண்டும். நமக்கு தெரியாமலே கிராமாந்தா பிரதேசங்களில் யுத்தத்திற்குத் தேவையானதும், வெளியிடங்களிலிருந்து தருவிக்க இயலாததுமான பலவித சாமான்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. யுத்தத்திற்கு பின்னும் இவை நீடித்து நிலைக்க வேண்டும். சுருங்கச்சொல்லுமிடத்து, நமக்குத் தெரிந்தோ, தெரியாமலோ நம் வாழ்க்கையின் போக்கு அமைக்கப்பட்டு வருகிறது. கடைசியில் அது பொது ஜனங்களுக்கு நன்மையில் முடிவதும், தீமையில் முடிவதும், அவர்கள் இந்த மாறுதல்களின் தன்மையை எவ்வாறு உணருகிறார்கள் என்பதை பொறுத்திருக்கிறது. பஞ்சாயத்து போர்டுகளுக்கு வெவ்வேறு சலுகைகள் காட்டும்படி வற்புறுத்தி நாம் பல தடவை இந்த இதழ்களில் எழுதியிருக்கிறோம். ஆனல்

இப்போது நாம் பொதுவாக கவர்மெண்டாரையும், இன்னும் இதில் அக்கரை கொண்ட மற்றவர்களையும் வேண்டிக்கொள்ளுவது யாதெனில், பஞ்சாயத்துகளின் பிரதிநிதி மெம்பர்களுக்கு சாதாரண நிர்வாக விஷயங்கள் மட்டுமல்லாமல், மற்ற பொது வாழ்க்கை விஷயங்களைப் பற்றியும் பயிற்சி அளிக்கவேண்டிய அவசியமேற்பட்டிருக்கிறது என்பதுதான். இதன் பயனாக அப்பிரதிநிதிகள் பொது ஜனங்களிடையே உழைத்து, அவர்களுக்கு விழிப்பு கொடுத்து, பொது அறிவை விருத்தியாக்க அனுகூலமாகும். பஞ்சாயத்தின் நிர்வாக விஷயம், வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் உள்ளடக்கியிருப்பது, பஞ்சாயத்து செய்யும்படி ஏற்பட்டிருக்கும் நிர்வாக சம்பந்தமான ஜாப்தாவிலிருந்து தெரியவரும். பஞ்சாயத்துகள் நிர்பந்தமாகவும், தாங்கள் இஷ்டப்பட்டாலும், செய்ய வேண்டிய கடமைகளின் ஜாப்தாவை கவனிக்கவும்.

இப்போதிருக்கும் ஸ்தல ஸ்தாபன சட்டபடி, பஞ்சாயத்துகள் ஜில்லா போர்டுகளின் ஸ்தானத்தை வகிக்கின்றனர். அதன் வேலைகளையும் கவனிக்கலாம். மேலும், 65, 65-A, B, C செக்ஷன்கள்படி கவர்மெண்டும், இதர ஸ்தாபனங்களும் செய்துவரும் வேலைகளையும் நடத்த முடியும். இஷ்டப்பட்டால், கவர்மெண்டார் கிராம நிர்மாண பொறுப்புகளை பஞ்சாயத்து போர்டினிடம் ஒப்படைக்கலாம். ஆனால் தற்போது அதிக அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கபடாமையாலும், திரவிய பலம் அதிகமில்லாமையாலும், பஞ்சாயத்துகள் அசக்தமான நிலமையில் இருப்பது வாஸ்தவம்தான். ஆனால் அது பஞ்சாயத்தார்கள் நன்கு பயிற்சியளிக்கப்பட்டு ஜனங்களிடையே சேவை செய்யும்படி சொல்லுவதற்கு தடையாக இருக்க வேண்டியதில்லை. மற்றொரு விதமான வேலையைச் செய்யும் கோவாபரேடிவ் ஸ்டோர்களுக்கு அங்கத்தினர்களை பயிற்சியளிக்கும் உயர்ந்த நன்மையை கவர்மெண்டார் அனுமதித்தார்கள். ஆனால் இதே போல் கிராம பஞ்சாயத்து அங்கத்தினர்கள் விஷயத்திலும் ஏன் கவனம் செலுத்தவில்லை என்பதை அறிய முடியவில்லை. கிராமத்தாரின் பூரா வாழ்க்கையிலும் பஞ்சாயத்து அங்கத்தினர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு பயிற்சியளிப்பது ரொம்பவும் அவசரமானது. கோவாபரேடிவ் பஞ்சாயத்தார்களுக்கு பயிற்சியளிப்பது உத்தியோக பற்றற்ற ஸ்தாபனங்களான மாகாண கோவாபரேடிவ் சங்கம், ஜில்லா பாங்கிகள், இவைகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் ஏற்படும் செலவு தொகையில் மூன்றில் இரண்டு பங்கு கவர்மெண்டார் கொடுத்து உதவுகிறார்கள். கிராம பஞ்சாயத்தார்கள் பயிற்சி விஷயத்திலும், உத்தியோகப் பற்றற்ற ஸ்தாபனங்களான மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் சங்கத்தை ஒரு திட்டம் தயார் செய்யச்சொல்லி, நன்றாக பரிசிலனை செய்தபின் அமுலுக்குக் கொண்டு வரலாம். ஆனால் பஞ்சாயத்துகளுக்காவது, அதன் சங்கத்திற்காவது செலவை ஏற்க நிதி கிடையாது. ஆகையால் கவர்மெண்டே எல்லா செலவையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். பஞ்சா

யத்துகளுக்கு நிர்வாக உத்தியோகஸ்தர்களையும், பிரத்தியேக உத்தியோகஸ்தர்களையும் பயிற்சி செய்து கொடுப்பதுடன் தங்கள் கடமை தீர்ந்துவிட்டது என கவர்மெண்டு நினைக்கவேண்டாம். பொது ஜனங்களின் வாழ்க்கையில் பல துறைகளில் அந்த உத்தியோகஸ்தர்களைக் காட்டிலும், பஞ்சாயத்தார்கள்தான் சாதிக்க முடியும்.

ஆகையால், தேசத்தின் பொது வாழ்வின் அபிவிருத்திக்கு இன்றியமையாததான பஞ்சாயத்துகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு, உத்தியோகப்பற்றற்ற ஸ்தாபனங்களுடைய ஒத்துழைப்பைப் பெற்று, கிராம பஞ்சாயத்தார்களுக்கு பயிற்சியளிக்க ஏற்பாடு செய்து, அதன் மூலம் உண்மையான கிராம தலைவர்கள் ஏற்பட்டு சேவை செய்யும்படி மிகவும் வற்புறுத்தி கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஸ்தல ஸ்தாபன சட்டத்தின்கீழ் ஹைகோர்ட் அப்பீல்.

ஸ்தல ஸ்தாபன சட்டம் செக்ஷன்கள் 193, 194, 207 இவைகளுக் கடியில் செய்யப்பட்ட குற்றங்கள் விஷயமாக ஒரு வழக்கு சமீபத்தில் சென்னை ஹைகோர்டுக்கு வந்து தீர்ப்பு கூறப்பட்டது. வழக்கின் விவரங்களாவன :—

ராமநாதபுரம் ஜில்லாவிலிருக்கும் தொண்டி பஞ்சாயத்து போர்டுக்கு ஒருவர் ஒரு இடத்தில் ஒரு நெல் மில் கட்டடம் கட்ட அனுமதியும், மில் நடத்த லைசென்சும் கோறி மனுச் செய்துகொண்டார். அம் மனுவை நிராகரித்து 30 நாளைக்குள் போர்டார் அவருக்கு பதிலனுப்பிவிட்டார்கள். மறுபடியும் அவர் இன்னொரு மனு, வேறு இடத்தில் ஸ்தாபிக்க அனுமதி கோறி போர்டாருக்கு போட்டார். அதற்கு போர்டார் 30 நாளைக்குள் அந்த மனுவானது ஜில்லா ஹெல்தாபீசருக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும், அவர் சிபார்சின்பேரில் இறுதியான உத்திரவு தெரிவிக்கப்படும் என்றும் பதிலனுப்பிவிட்டார்கள். பிறகு கொஞ்சநாள் கழித்து, (அதாவது, 30 நாட்களுக்குப்பின்) அந்த இரண்டாவது மனுவும் நிராகரிக்கப்பட்டதாக தெரிவித்தனர். இதற்குள் அந்த மனுதார், மில் கட்டடம் எழுப்பி, மில் தொழில் நடத்த தொடங்கிவிட்டதால், பஞ்சாயத்து போர்டார் அவர்மீது சட்டத்தின் 193, 194, 207 செக்ஷன்படி சப்-மாஜிஸ்ட்ரேட் முன் வழக்கு தொடர்ந்தார்கள். அவர் பிரதிவாதியை 3 செக்ஷன்படியும் குற்றவாளி என கூறி, அபராதம் விதித்தார். அதன்பேரில் பிரதிவாதி சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அப்பீல் செய்துக்கொண்டதின் பேரில், அவர் 194, 207 செக்ஷன்கள்படி (அதாவது உத்திரவில்லாமல் கட்டடம் எழுப்பியது) தண்டனையை ஊர்ஜிதம் செய்து, 193 செக்ஷன் குற்றத்திற்காக விதிக்கப்பட்ட தண்டனையை ரத்து செய்தார். ஏனெனில், ஷை சட்டம் செக்ஷன் 211, பிரிவு (11) படி, ஒருவர் லைசன்சு கோரி மனு போட்ட 30 நாளைக்குள் போர்டாரிடமிருந்து ஒரு பதிலும் கிடைக்

காத பக்ஷத்தில், அவர் மனு அனுமதிக்கப்பட்டதாக கருதப்படவேண்டும் என்று கண்டிருக்கிறபடியால், மனுதார் மனு போட்டு 30 நாளைக்குள் அவருக்கு அதை நிராகரித்து தெரிவிக்கப்படாததால், அவர் 193 செக்ஷன் படி குற்றம் செய்தவராகமாட்டார் என்று அபிப்பிராயப்பட்டு, அந்த செக்ஷனடியில் அளித்த தண்டனையை ரத்து செய்தார். ஹைகோர்டுக்கு போர்டார் இதன்மீது அப்பீல் செய்துகொண்டதில், சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டின் தீர்ப்பு நிராகரிக்கப்பட்டு, வழக்கு புனர் விசாரணைக்கு கீழ் கோர்டுக்கு அனுப்பப்பட்டது. ஹைகோர்டின் தீர்ப்பு என்னவெனில், மனுதார் இரண்டாவது மனுவின்பேரில் 30 நாளைக்குள் அதைப்பற்றி ஹெல்தாபீசருக்கு அது அனுப்பப்பட்டு, அவருடைய சிபார்சு கிடைத்த பின் தீர்மானமான பதில் தெரிவிக்கப்படும் என்று கண்டிருந்தபடியால், போர்டார் அதன்படி பின்னிட்டு, 30 நாள் கடந்தும், தங்களது தீர்ப்பை தெரிவிக்க உரிமையிருக்கிறதென்றும், மனு தேதியிலிருந்து கடைசி பதிலுக்கு 30 நாட்கள் கடந்ததாலேயே அந்த லெட்டர் எழுதியிருந்த சந்தர்பத்தால், அவர்கள் உரிமை போய்விடவில்லையென்றும், மனுதார் ஆகையால் குற்றவாளி என்று கருதப்படவேண்டும் என்றும் சொல்லப்பட்டது.

இந்தியாவின் தேகாரோக்கிய நிலைமை.

[மிஸ்டர் ஜான் பி. கிரண்டு, M. D. என்பவர் ஒரு சிறந்த கவர்மெண்டு உத்தியோகஸ்தர். இந்திய தேகாரோக்கியத்தைப்பற்றி அவர் ஒரு சிறு புத்தகம் எழுதியிருக்கிறார். அதிலிருந்து சில புள்ளி விவரங்களும், அவருடைய அபிப்பிராயங்களும் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. ப-ர்]

1937-ல் இந்தியாவிலும் மற்றும் சில தேசங்களிலும் உள்ள ஜனன மரண கணக்கு விவரம்:—

1000 ஜனத் தொகைக்கு.			மரணம்.	ஜனனம்.	சிசு மரணம்.
இந்தியா ...	,,	,,	22.4	34.5	162
ஆஸ்திரேலியா ..	,,	,,	9.4	17.4	38
அமெரிக்கா ...	,,	,,	11.2	17.0	54
இங்கிலாந்து .	,,	,,	12.4	14.9	58
லங்கை ...	,,	,,	21.7	37.8	158
ஜாவா ...	,,	,,	18.8	28.3	...
ஜப்பான் ...	,,	,,	17.0	30.6	106

இந்தியாவில் சராசரி ஒருவனுடைய ஆயுள் காலம் 27 வருஷம்தான். ஆஸ்திரேலியாவில் 67 வருஷமும், இங்கிலாந்தில் 63 வருஷமும், ஜெர்மனியில் 63 வருஷமும், ஜப்பானில் 47 வருஷமுமாக இருக்கிறது. இதிலிருந்து இத்தேசத்தின் கேவலமான தேகாரோக்கிய நிலைமை ஒருவாறு தெரிந்துகொள்ளலாம்.

தடுக்கக் கூடிய வியாதிகளாவன, வைசூரி, டைபாய்டு (typhoid) சீதபேதி, வாந்திபேதி, மலேரியா முதலிய வியாதிகள் பரவியிருக்கின்றன. 1939-ல் உண்டான 6,165,234 மரணத்தில் 1,411,614 மலேரியாவினாலும், 48,103 வைசூரியினாலும், 97,566 வாந்திபேதியினாலும், 260,300 சீதபேதி, மற்ற பேதி வியாதிகளாலும் ஏற்பட்டவை.

தொழில் அபிவிருத்திக்காக 15 வருஷ திட்டம்.

சர் புருஷோத்தமதாஸ் தாகூர் தாஸ் என்பவரும் மற்றும் ஏழு பெரிய தொழிலாளிகளும் இந்தியாவின் பொருளாதார நிலைமையை சீர்திருத்துவதற்காக ஒரு திட்டம் தயார் செய்திருக்கிறார்கள். அது மூன்று ஐந்து வருஷ திட்டங்களாக பிரிக்கப்பட்டு மொத்தம் 10,000 கோடி ரூபாய் செலவு செய்து நிறைவேற்றப்படும்படி தயாரிக்கப்பட்டிருக்கிறது. மேலும் அது முற்றிலும் வெற்றிகரமாக அமுல் நடத்த, இத்தேசத்தில் யுத்தம் முடிந்தவுடனே, அல்லது முடிந்த கொஞ்ச காலத்திற்குள்ளோ, பொருளாதார துறைகளில் சர்வ ஸ்வதந்திரம் கொண்ட ஒரு தேசிய கவர்மெண்டு ஏற்படுத்தப்படும் என்ற அடிப்படையான ஆதாரத்தின் பேரில் வகுக்கப்பட்டிருக்கிறது. அதற்குத் தேவையான ஆள் பலமும் திரவியமும், சாமான்களும் கிடைக்கின்றன. தேச ஜனங்களும், கவர்மெண்டும் ஒத்துழைத்து நடத்த வேண்டியதுதான் முக்கியம்.

பல இனங்களுக்காக இம்மூன்று திட்டங்களுக்கு ஏற்படும் செலவின் விவரமாவது :—

மூலாதார பொருள் உற்பத்தி தொழில் சாலைகள் 3,480 கோடி ரூபாய் ஜனங்களின் தேவைக்கு வேண்டிய பொருள்கள் உற்பத்தி சாலைகள் 1,000 கோடி ரூபாய், விவசாயம் 1,240 கோடி ரூபாய், போக்கு வரத்து சாதனங்கள். 940 கோடி ரூபாய், கல்வி 490 கோடி ரூபாய், தேகாரோக்கியம் 450 கோடி ரூபாய், வீடு கட்ட 2,200 கோடி ரூபாய், சில்லரை இனங்கள் 200 கோடி ரூபாயாகும்.

மூலாதாரபொருள் உற்பத்தி தொழில் சாலைகள்தான் எல்லாவற்றையும் முக்கியமானதாகவும், தேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு இன்றியமையாததாகவும் கருதப்படவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்தின்படி விவசாய உற்பத்தி 130 சதவிகிதம் அதிகப்படியாகும்படியாகவும் அதற்காக விவசாயமுறைகளில் செய்யவேண்டிய சில முக்கியமான சீர்திருத்தங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வது, விவசாயிகளின் கடன் சுமையை ஒழிப்பது, பூமி பாழாவதை தடுப்பது, அதிக பூமியைப் பயிராக்குவது, இவைகள் சம்பந்தப்பட்டவை. விவசாயிக்கு போதிக்க 10 கிராமங்களுக்கு ஒரு பண்ணையாக 65,000 மாதிரி பண்ணைகள் ஏற்படுத்தும்படி செய்யப்பட்டிருக்கிறது.

இந்த திட்டத்தை தயார் செய்தவர்களின் நோக்கத்தைப்பற்றி தெரிவித்திருப்பதாவது :—

(1) இதன் முக்கிய அரசியல் நோக்கம் என்னவெனில் 15 வருஷத்திற்குள் ஒவ்வொருவனின் சராசரி வருமானம் தற்போதிருப்பதைவிட இரண்டு மடங்கு அதிகப்படியாகவேண்டும்.

(2) அதனால் தேசத்தின் வருவாய் மூன்று மடங்கு அதிகரிக்கும்.

(3) விவசாய விளைவை இப்போதைவிட இரண்டு மடங்கு கொஞ்சம் அதிகமாக விரித்தி செய்யவேண்டும்.

(4) சின்ன தொழில், பெரிய தொழில் உற்பத்தி சமார் ஐந்து மடங்கிற்கு மேல் உற்பத்திசெய்யவேண்டும்.

இப்படி செய்தும் நம் தேசம் விவசாயத்தை முக்கியமான தொழிலாகக் கொண்ட தேசமாகவே இருக்கும். ஆனால் தற்போது போல் விவசாயத்தையே நம்பியிருக்கும்படியான நிலைமையில் இருக்காது. இந்த திட்டத்தின்படி இந்த குறுகிய காலத்தில் அமுலுக்குக் கொண்டு வருவதில் உள்ள கஷ்டங்கள் தெரிந்திருக்கிறது என்று கண்டிருக்கிறது இருந்தபோதிலும் தகுந்தபடி ஆதரவு செய்யப்படும் பக்ஷத்தில் திட்டத்தை வெற்றிகரமாக நடத்த முடியும் என்கிற நம்பிக்கையின் பேரில் இது தயார் செய்யப்பட்டிருக்கிறது.

அனைவருக்கும் கல்வி.

[மிஸ்டர் சார்ஜண்டு என்பவர் இந்தியா கவர்மெண்டின் கல்வி ஆலோசனையாளர், சிலநாட்களுக்கு முன் அவர் இத்தேசத்தில் 50 வருஷத்தில் எல்லாரும் கல்வி பயிலும்படிக்கு 450 கோடி ரூபாய் செலவு செய்யவேண்டி வரும் ஒரு திட்டம் தயார் செய்தார். இந்தியா கவர்மெண்டில் கல்வி ஆலோசனை போர்டு என்று ஒரு ஸ்தாபனம் இருக்கிறது. அவருடைய திட்டம் இந்த போர்டின் பரிசிலனைக்கு அனுப்பப்பட்டது. அந்த போர்டானது இதரர்களுடன் கலந்தாலோசித்து 20 வருஷத்தில் பூர்த்தியாகி, மேலும், 61 கோடி ரூபாய் அதிகப்படியாக செலவு செய்ய வேண்டி வரும்படியான ஒரு திட்டத்தை தயார் செய்தார்கள். இத்திட்டம் வைசிராய் நிர்வாக சபையின் யுத்தத்திற்குபின் நிர்மான வேலை செய்ய ஏற்பட்டிருக்கும் கமிட்டிக்கு அனுப்பப்படும். அடியில் கல்வி ஆலோசனை போர்டின் சிபார்சுகளை சுருக்கமாக கொடுத்திருக்கிறோம். ப-ர்.]

இத்திட்டத்தில் இந்தியா தேசத்திலிருக்கும் எல்லா குழந்தைகளுக்கும் ஆரம்பக்கல்வியளிக்கவும், கொஞ்சம் முன்னுக்கு வரும்படியாகத் தோன்றும் பிள்ளைகளுக்கு ஹைஹ ஸ்கூல், யூனிவர்சிடி கல்வியளிக்கவும் வசதிகள் அளிக்க எல்லா ஏற்பாடுகளும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் தேசத்திற்கு தற்சமயம் தேவையான தொழில் கல்வியும், அதற்காக பயிற்சியளிப்பதும் ஒரு முக்கிய நோக்கமாக இருக்கிறது. இத்திட்டத்தில், பள்ளிக்கூட, யூனிவர்சிடி கல்வி முறைகளைப்பற்றியும், தொழில் கல்வி, வியாபார கல்வி, சாதாரண ஆர்ட்ஸ் (Arts) கல்விகளைப்பற்றியும், உபாத்தியாயர்களுக்கு பயிற்சியளிக்கும் வழிகளைப்பற்றியும், பள்ளியில் படிக்கும் பிள்ளைகளின் தேகாரோக்கியத்தைப்பற்றியும், மேலும் பிள்ளைகளுக்கு உல்லாசமாக இருக்க திட்டங்களைப்பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

முதல் 5 வருஷத்தில் இதனுல் ஏற்படும் அதிகப்படியான செலவு தொகை சுமார் 10 கோடி ரூபாய் என்றும், 10 வருஷத்தில் அது சுமார் 23 கோடி ரூபாய் ஆகுமென்றும், 20 வருஷத்தில் 61 கோடி ரூபாய் வரையில் பிடிக்கும் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. 5 வருஷத்திற்குப்பின் அதிகப்படி செலவு ஹைஹ ஸ்கூல் கல்வி எவ்வளவு தூரம் பரவுகிறது என்பதை பொருத்திருக்கிறது.

மதசம்பந்தமான விஷயங்களைப் போதிப்பதைப்பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. மத ஸ்தாபனங்களால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்கள் கல்வி விஷயமாக, கவர்மெண்டார் விதிக்கும் கட்டுப்பாடுகளுக்குட்படுமானுல், அவை எப்போதும் போல் அனுமதிக்கப்பட்டு நடத்தப்படலாம். மத சம்பந்தமான கல்வி விஷயத்தைப்பற்றி இன்னும் விவரமாக ஆராய்ச்சி செய்ய ஒரு கமிட்டி நியமிக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. 6 வயது முதல் 14 வயது வரை பிள்ளைகளுக்கு கட்டாய கல்வியளிக்கவும், ஆனுல் அகில யூனிவர்சிடி போர்டின் சிபார்சுபடி 5 வயது பிள்ளைகளையும் கல்வி கற்கும்படி தூண்டப்படுத்த முயற்சிகள் செய்யவேண்டுமென்றும் முன்பு செய்த போர்டின் தீர்மானம் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

ஆரம்பக் கல்வியிலும், நடுத்தர கல்வியின்போதும் ஆங்கிலம் போதிக்கப்பட வேண்டியதைப்பற்றி அது அவ்வளவு உசிதமல்ல என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனுல் பிரத்தியேக இடங்களில் அது வேண்டுமென்று பலமான விருப்பம் இருந்தால், அதைப்பற்றி மாகாண கல்வி இலாகா கவனிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

யூனிவர்ஸிடி கல்வி விஷயமாக, மத்திய கவர்மெண்டு அல்லாமல் ஒரு பிராந்தியேக மத்திய ஸ்தாபனத்தினிடம், திரவிய சகாயம் செய்யும் விஷயத்தை ஒப்படைக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.

தொழில் கல்வி, மற்ற கல்வியுடன் கூடவே பயிற்சியனுபவ போதனையும் செய்யவேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

இத்திட்டத்தின்படி, கை வேலை செய்பவர்களுக்கு பள்ளிக்கூடங்களும், கைத்தொழில் கல்வியளிக்கும் ஹைஸ்கூல்களும், இஞ்சினீரிங் கல்விதரும் 3 வருஷ டிப்ளமா கல்வியும் ஏற்படுத்தப்படும். தேசிய கைத்தொழில் கல்வி கௌன்சில் என்ற ஸ்தாபனத்தின் மேல்பார்வையின் கீழ் தேசம் முழுவதும் பாலிடெக்னிக்ஸ் (Polytechnics) கல்வி போதிக்கப்படும்.

விவசாய கல்வி விஷயமாக கூடிய சீக்கிரம் இன்னொரு கூட்டத்தில் விவசாய நிபுணர்களுடன் கலந்தாலோசித்தபின் வேலை திட்டம் தயார் செய்யப்பட வேண்டும். என தீர்மானிக்கப்பட்டது.

வர்த்தமானங்களும், குறிப்புகளும்.

வைசிராய் கிராமங்களில் சுற்றுப் பிரயாணம் செய்கிறார், பிஜப்பூர் பக்கங்களில் சுற்றுப் பிரயாணம்.

அவர் பிஜப்பூரில் வந்த ஒரு மணி சாவகாசத்திற்குள் அவ்விடத்திலிருந்து மடபாவி கிராமத்திற்குச் சென்றார். அதன் ஜனத்தொகை 1000. அவர் கிராம பள்ளிக்கூடத்தை பார்வையிட்டபின் கிராம சாவடியில் கிராமத்திலுள்ள முக்யஸ்தர்களையும், அப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும், யுத்தத்திலிருந்து திரும்பி வந்த சிப்பாய்களையும் சந்தித்து பேசினார். புதிதாக பட்டாளத்தில் சேர்ந்த ஆட்களையும், அவ்விடத்தில் நூதன உடை தரித்து லமானிபெண்கள் செய்த நாட்டியத்தையும் பார்த்தார். இந்த லமானிகள் முன்பு தேசாந்திரிகளாக இருந்து இப்படி விவசாயத்தில் ஈடுபட்டு வாழ்க்கை நடத்திவருகிறார்கள். பிஜப்பூரிலுள்ள உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படும் 'கோல் கும்பாஸ்' என்னும் பிருமாண்டமான கட்டடத்தையும் 2 நிமிஷம் போய்ப் பார்த்தார். அது 300 வருஷங்களுக்கு முன் கட்டப்பட்டபோதிலும், கொஞ்சமும் பழுதடையவில்லை. அதன் மண்டபத்தினடியில் செய்யப்படும் சிறு சப்தமும் ஏழு மடங்கு பலமாக நாலாபக்கமும் பிரதிபலிக்கப்படுகிறது.

* * *

இந்திய ரயில் வண்டிகள்.

இந்தியாவில் 40,477 மைல் ரயில் லையன்கள் இருக்கின்றன. அவைகளில் 1941-42-ல் 62 கோடி 30 லக்ஷம் ஜனங்கள் பிரயாணம் செய்தார்கள். மொத்த வருமானம் 144 கோடி 69 லக்ஷ ரூபாய். சுமார் 7,58,000 பேர்கள் ரயில்வேக்களில் வேலை செய்கிறார்கள். அவர்களுடைய வருஷ சம்பளம் 39,14,00,000 ரூபாய், அதாவது மாதம் ஒன்றுக்கு சராசரி 36 ரூபாயாகிறது.

* * *

ரூபாய் நோட்டுகள்.

1-9-1939-ல் 172 கோடி ரூபாய் நோட்டுகள் அச்சடிக்கப்பட்டன. 8-5-1943-ல் 640 கோடி ரூபாய் நோட்டுகள் நடமாட்டத்திலிருக்கின்றன.

பாங்க், லிமிடெட்.

(1912 வருடம் II வது ஆக்ட் ஆகிய 1932 வருடம் VI ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது)

தலைமை ஆபீஸ்.

சைனு பஜார் ரோட், மதராஸ். போன் நெ. 2390.

மைலாப்பூர் பிராஞ்சு :

லஸ் சர்ச் ரோட், மைலாப்பூர், போன் நெ. 3334.

எழும்பூர் பிராஞ்சு:

ஹிப்ராஹிம் காலனி, எழும்பூர், போன் நெ. 8510.

பிரசிடெண்டு :

மிஸ்டர் டி. எ. ராமலிங்கம் செட்டியார், பி.எ., பி.எல்., எம்.எல்.சி.

ஸெக்ரடேரி :

டி. ராகவேந்திர ராவ்.

இந்த நாட்டிலிருக்கும் விவசாயிகளுக்கு பொருப்பு சம்பாதித்துக் கொடுப்பதில் இந்த பாங்கு முக்கிய ஸ்தாபனமாகும்.

இந்த பாங்கு மதருஸ் கார்பரேஷனுக்கும், மதருஸ் யூனிவர்ஸிடி, அண்ணாமலை, ஆந்திரா யூனிவர்ஸிடிகளுக்கும், மற்ற லோகல் போர்டுகள், டிஸ்டிரிக்ட் முனிசிப்பாலிடிகளுக்கும் பாங்காராக இருக்கின்றது.

விதிகள், வியாபார நிபந்தனைக்கும் கீழ்கண்டவருக்கு எழுதவும் :

ஸெக்ரடேரி,
தலைமை ஆபீஸ்
அல்லது
பிராஞ்சுகள்.

வெளியிட்டவர், பிரசுரகர்த்தா, மிஸ்டர். வி. விய்யன்னா, பி.எ., பி.எல்.,
187, ராயப்பேட்டை ஹைரோட், ராயப்பேட்டை, மதராஸ்.

மதருஸ் மவுண்ட் ரோட் நெ. 1/17 ல் அமைத்திருக்கும்
சென்ட்ரல் கோவாபரேடிவ் அச்சுக்கூடத்தில்
மிஸ்டர் ஆர். கிருஷ்ணமாச்சாரி, பி. எ., அவர்களால் பதிப்பிக்கப்பட்டது

ஸௌத் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஸொஸைடி, லிமிடெட், மதருஸ்.

ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம். எல். ஏ., (பிரஸிடெண்ட்.)

கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஒன்றே உங்களுக்குக் குறைந்த பிரிமிய விகிதங்களில் மிகுந்த பாதுகாப்பதோடு, நல்ல வருஷவாரி லாபத்தொகையும் தாராளமான பாலிஸி நிபந்தனைகளும் மற்றும் உன்னத சலுகைகளும் காட்டவல்லது.

லாபத்தொகை முழுவதும் பாலிஸிதார்களையே அடைகிறது. இந்த ஸொஸைடி அவர்களுக்கே சொந்தம், அவர்களுக்காகவே இருக்கிறது—அவர்களாலேயே நடத்தப்பெறுகிறது.

மிகச்சிக்கனமாக காரியாதிகள் நடத்தப்பட்டு, அரசாங்கத்தாரின் நேரான கண்காணிப்பில் பலமான க்ஷேமநிதி முதலியன ஏற்படுத்திக்கொண்டிருப்பதால் அதிக க்ஷேமகரமாக உள்ளது.

பாலிஸி தொகை	—	1,30,00,000.
க்ஷேமநிதி	—	10,00,000.

உங்களுக்குத் தக்க பாலிஸி விபரத்திற்கு எழுதுங்கள்.

வி. வெங்கடாசலம், எம். ஏ., பி. எல்.,

காரியதரிசி.